# குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை

## அறிமுகம்

தேசத்தின் குழந்தைகள் உன்னதமான முக்கிய சொத்து. அவர்களை வளர்த்து ஆளாக்குவது நமது பொறுப்பு. மனித ஆற்றல் மேம்பாட்டுக்கான நமது தேசியத் திட்டங்களில் குழந்தைகள் தொடர்பான திட்டங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் நமது குழந்தைகள் பொறுப்புள்ள, சிறந்த குடிமக்களாகவும் உடல்திறனுடனும், துடிதுடிப்பு மனோபாவம் கொண்டவர்களாகவும் இந்த சமுதாயத்தால் வழங்கப்பட்ட ஊக்கமும் உற்சாகமும் நிறைந்த, திறமைகள் வாயந்த குடிமக்களாக உயர்வார்கள். குழந்தைகளின் வளர்ச்சிக் கட்டத்தின்போது அவர்கள் முன்னேற்றத்திற்கு சமவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பது நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். சமூக நீதி வழங்குதல், ஏற்றத்தாழ்வுகளைக் களைதல் என்ற நமது முக்கிய குறிக்கோளுக்கு இது உறுதுணையாக அமையும்.

## குறிக்கோள்கள்:

குழந்தைகளின் தேவைகள், அவற்றை நிறைவேற்றுவதில் நமது கடமைகள் குறித்து அரசியலமைப்புச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்தில் கல்வித் திட்டம் தொடர்பான தேசிய கொள்கை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் குழந்தைகளின் கல்வி தேவையைக் குறித்த அரசின் கொள்கை எப்படி அமைய வேண்டும் என்பது விளக்கப் பட்டுள்ளது. குழந்தைகளின் உரிமைகள் குறித்த ஐ.நா.அமைப்பின் பிரகடனத்தில் இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஆவணங்களில் இடம்பெற்றுள்ள குறிக்கோள்களை தேசிய ஆதார வளங்களை திறம்பட பயன்படுத்திக்கொள்வதன் மூலம் எட்ட முடியும்.

## கொள்கையும் செயல்திட்ட நடவடிக்கையும்

குழந்தைகளின் உடல், மனம், சமூக ரீதியயிலான மேம்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் பிறப்புக்கு முந்தைய மற்றும் பிந்தைய வளர்ச்சித் காலத்தின்போது, அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் சேவைகளையும் வழங்குவது அரசின் கொள்கையாக இருக்க வேண்டும். உரிய காலக் கெடுவிற்குள் தேசத்தின் அனைத்துக் குழந்தைகளும் சமச்சீரான வளர்ச்சியை எட்டுவதற்கான சூழ்நிலைகளை அனுபவிக்க ஏதுவாக, இப்படிப்பட்ட சேவைகளுக்கான வாய்ப்புகளையும் வழிமுறைகளையும் அரசு முனைப்புடன் அதிகப்படுத்த வேண்டும். குறிப்பாக, இந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும் :

1. அனைத்துக் குழந்தைகளுக்கும் விரிவான, முழுமையான, உடல் நல திட்டத்தின் பலன்களை கிடைக்கச் செய்ய வேண்டும்.
2. குழந்தைகளின் உணவில் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கும் வகையில் ஊட்டச்சத்து சேவைகளை வழங்குவதற்கானத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
3. உடல் நலம் குறித்தப் பொதுவான மேம்பாடு, கருவுற்ற மற்றும் குழந்தைப் பெற்றெடுத்த தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து, இது தொடர்பான கல்வி, ஆகியவைக் குறித்த திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. பதினான்கு வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கிடைக்கக்கூடிய ஆதார வளங்களைப் பயன்படுத்தி இதை முனைப்புடன் நிறைவேற்றுவதற்குக் காலக்கெடு நிர்ணயிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பெண் குழந்தைகள் மற்றும் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளின் கல்வி கற்க வேண்டிய காலம் வீணாவதையும்

கல்வி பாதியிலேயே நின்றுவிடுவதையும் குறைப்பதற்கான விசேஷ முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பள்ளிக்கூடத்தில் சேர்வதற்கு முன்பு இந்த குழந்தைகளுக்கு முறைசாரா கல்வி வழங்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. கல்வியின் முழுப்பலன்களையும் பெற முடியாத நிலையில் உள்ள குழந்தைகளுக்கு அவர்களின் தேவைகளுக்குப் பொருத்தமாக வேறு முறையிலான கல்வி வசதி அளிக்கப்பட வேண்டும்.
6. பள்ளிக்கூடங்கள், சமுதாய மையங்கள் மற்றும் இத்தகைய இடங்களில் உடற்கல்வி, விளையாட்டுகள், பொழுதுபோக்கு மற்றும் அறிவியல் நடவடிக்கைகளும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
7. சம வாய்ப்புகளை உறுதிப்படுத்துவதற்காக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின சமுதாயத்தைச் சேர்ந்த குழந்தைகள், சமுதாயத்தில் நலிவடைந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் மற்றும் நகர்ப்பகுதி மற்றும் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த பொருளாதார ரீதியில் நலிவடைந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் சிறப்பு உதவி வழங்கப்பட வேண்டும்.
8. சமூக ரீதியில் முடமாக்கப்பட்ட, குற்றச் செயல்களில் ஈடுபடும் நிலைக்கு தள்ளப்பட்ட, பிச்சை எடுக்கும்படி நிர்பந்திக்கப்பட்ட அல்லது வேறுவிதமான துயரங்களுக்கு ஆளாக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வி வசதிகள் வழங்கப்பட வேண்டும்.
9. புறக்கணிப்பு, கொடூரம், சுரண்டல் ஆகிய பாதிப்புகளுக்கு ஆளாகாமல் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
10. 14 வயதுக்குக் கீழே உள்ள எந்தக் குழந்தையையும் உடல்நலனுக்கு கேடு விளைவிக்கும் தொழில்களில் ஈடுபட அனுமதிக்கக் கூடாது அல்லது கடுமையான வேலைகளில் ஈடுபடுத்தக் கூடாது.
11. உடல் ஊனமுற்ற குழந்தைகள், உணர்வுரீதியாக பாதிக்கப்பட்ட அல்லது மனநலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்புப் பயிற்சி, கல்வி, மற்றும் மறுவாழ்வு அளிப்பதற்கான வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

12. துயரமான சூழ்நிலைகள் அல்லது இயற்கைச் சீற்றங்களின் போது பாதுகாப்பும் நிவாரணமும் வழங்குவதில் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.
13. மேதைமையையும் அபாரத் திறனையும் இயல்பாகக் கொண்டுள்ள குழந்தைகளை குறிப்பாக சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த குழந்தைகளை அடையாளம் கண்டு, அவர்களை ஊக்கப்படுத்தவும் உதவி செய்யவும் சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.
14. பெற்றோர்களுக்கு இடையிலோ அல்லது அமைப்புகளுக்கு இடையிலோ சட்டரீதியான அனைத்து தகராறுகளின் போதும் குழந்தைகளின் நலனுக்கு தலையாய முக்கியத்துவம் கொடுக்கப்படும் வகையில் தற்போதைய சட்டங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டும்.
15. குழந்தைகளுக்கான சேவைகளுக்கு ஏற்பாடு செய்யும்போது குடும்ப உறவுகள் வலுப்படுத்தப்படுவதை மையமாகக் கொண்ட முனைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் இயல்பான குடும்ப சூழ்நிலை, அக்கம்பக்கத்தினர் மற்றும் சமூக சூழ்நிலைகளோடு இயைந்து குழந்தைகள் வளர்ச்சியடைவதற்கான முழுமையான வாய்ப்புகள் உருவாகும்.

**திட்டமிடுதலில் முன்னுரிமை :**

வெவ்வேறு பிரிவுகளில் திட்டங்களை வகுக்கும்போது, கீழ்க்கண்டவைத் தொடர்பான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் :

1. குழந்தை உடல்நலம் தொடர்பான முன்னெச்சரிக்கை மற்றும் மேம்பாட்டு அம்சங்கள்.
2. மருத்துவ சிகிச்சைப் பெற்று வரும் தாய்மார்களுக்கும் கருவுற்ற தாய்மார்களுக்கும் ஊட்டச்சத்தான உணவுகளை அளிப்பதோடு, கைக் குழந்தைகளுக்கும் பள்ளிப் பருவத்திற்கும் முந்தைய வயதான குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து நிறைந்த உணவு அளித்தல்.

3. ஆதரவற்ற, கைவிடப்பட்ட குழந்தைகளைப் பராமரித்து கல்வி அளித்தல், பயிற்சி வழங்குதல்.
4. உடல்நலம் குறைவான மற்றும் வேலை பார்க்கும் தாய்மார்களின் குழந்தைகளை பராமரிக்க தேவையான குழந்தை காப்பகங்கள் மற்றும் இதர வசதிகளை வழங்குதல்
5. உடல் ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரித்து கல்வி அளித்தல், பயிற்சி வழங்குதல்

**தேசியக் குழந்தைகள் வாரியம் அமைத்தல்** :

மேலே கூறப்பட்டுள்ளபடி குழந்தைகளுக்கான சேவைகளை வழங்குவதில் நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளோம். உடல் நலம், ஊட்டச்சத்து, கல்வி, நலத்திட்டம் ஆகிய சேவைகள் கணிசமான அளவுக்கு விரிவடைந்துள்ளன. வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ள இடங்களில் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளும் மறைமுகமாக ஓரளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், இந்த அனைத்து வினயங்களிலும் வெற்றி பெற ஒருமித்த கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. மேலும், குழந்தைகளின் தேவையை நிறைவேற்றுவதற்கான சேவைத் திட்டங்களை முறையாக ஒருங்கிணைப்பதற்கும் இதற்கானத் திட்டமிடல் மற்றும் மறுஆய்வு செய்வதற்கும் ஒரு அமைப்பை உருவாக்க வேண்டியுள்ளது. வெவ்வேறு நிலைகளில் தொடர்ந்து திட்டமிடல், ஆய்வு செய்வது மற்றும் அனைத்துவிதமான அத்தியாவசியமானப் பணிகளை ஒருங்கிணைப்பதற்குக் குழந்தைகளுக்கான தேசிய வாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் மாநில அளவிலும் இதுபோன்ற வாரியங்களை அமைக்கலாம்.

**தன்னார்வ அமைப்புகளின் பங்கு** :

குழந்தை நலத்திட்டங்களுக்காக போதுமான ஆதாரவளங்களை வழங்கவும், உரிய செயல்திட்டங்களை வகுக்கவும் அரசு முனைப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே சமயத்தில் கல்வி, உடல் நலம், பொழுதுபோக்கு மற்றும் சமூகநலப் பணிகளில் ஈடுபட்டுள்ளத் தன்னார்வ அமைப்புகள் அதனதன் சொந்த முயற்சியாலோ அல்லது அரசின் உதவியுடனோ அந்தப் பணிகளில் தொடர்ந்து முன்னேற்றம் காண வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். தன்னார்வத் தொண்டு நடவடிக்கைகளில் ஒரு பாரம்பர்யத்தைக் கொண்டுள்ள நாடு, இந்தியா. அரசும் தன்னார்வ அமைப்புகளின் நடவடிக்கைகளும் பரஸ்பரம் உறுதுணையாக அமையும் வகையில் தன்னார்வ சேவைத் திட்டங்களை ஊக்கப்படுத்தி வலுவடைய வைப்பதில் அரசு முனைப்புடன் செயல்பட வேண்டும். தன்னார்வ அமைப்புகள் அறக்கட்டளைகள், மத அமைப்புகளின் பொதுநிதி மற்றும் தர்ம ஸ்தாபனங்களின் ஆதாரங்களை முறையாகப் பயன்படுத்தி, முடிந்தளவுக்குக் குழந்தை நலத் திட்டங்களை மேம்படுத்தி, விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**சட்டரீதியான, நிர்வாகம் சார்ந்த நடவடிக்கை** :

மேற்கண்ட குறிக்கோள்களை எட்டுவதற்கு உரியமுறையில் சட்டரீதியிலான மற்றும் நிர்வாகம் சார்ந்த ஆதரவை அரசு வழங்க வேண்டும். பல்வேறு சேவைகளை மேம்படுத்துவதற்கும் இது தொடர்பானத் திட்டங்களை விரிவுபடுத்துவதற்கும் ஏதுவாக இவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயிற்சி வழங்கவும் அது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளவும் தேவையான வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**மக்கள் பங்கேற்பு** :

குழந்தைகளின் நலனுக்காகப் பாடுபடும் அமைப்பினர், அனைத்துத்தரப்பு மக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பும் ஆதரவும்

இங்கே விவரிக்கப்பட்டுள்ள கொள்கைத் திட்டங்களுக்குக் கிடைக்கும் என இந்திய அரசு நம்பிக்கைக் கொண்டுள்ளது. இந்தக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தங்களுடைய பங்களிப்பைப் பொதுமக்களும் தன்னார்வ அமைப்புகளும் வழங்க வேண்டும் என இந்திய அரசு வேண்டுகோள் விடுக்கிறது.